Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.
Case No. C.C.No. 503 /2023

Deposition of witness for Prosecution – P.W.1 Date : 21.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | ஆறுச்சாமி | Village : | குளத்தூர் |
| Father's Name : | பழனிச்சாமி | Taluk : | சூலூர் |
| Age : | 71 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of November 2025 **(Accused present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது குளத்தூரில் குடியிருந்து வயது முதிர்வின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன். நானும் என் மனைவியும் கீரணத்தத்திற்கு கடந்த 27.06.2022ம் தேதி ஒரு துக்க வீட்டிற்கு TVS ஜுப்பிட்டர் வாகனம் பதிவு எண். 7945ல் சென்றோம். விளாங்குறிச்சியில் இருந்து காளப்பட்டிக்கு திரும்பி வந்து கொண்டிருந்த போது எங்களுக்கு பின்னால் இருந்து வந்த Passenger Auto வேலவன் ஹாலோபிளாக் கம்பெனி அருகே எங்கள் பின்னால் மோதியது. நாங்கள் கீழே விழுந்தோம். அதில் என் மனைவிக்கு தலையில் அடிப்பட்டுவிட்டது. எனக்கு வலது தோள்பட்டையிலும் கால் முட்டியிலும் அடிப்பட்டுவிட்டது. பக்கத்தில் இருந்தவர்கள் காரில் எங்களை சரவணம்பட்டி முத்தூஸ் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கிருந்து நாங்கள் கோவை அரசு மருத்துவமனைக்குசென்றோம். விபத்து நடந்த நேரம் மதியம் சுமார் 1.30 ஆகும். அன்றைய தினம் இரவு சுமார் 10.30 மணியளவில் என் மனைவி இறந்துவிட்டார். இது தொடர்பாக கோவில்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அன்றைய தினம் அந்த ஆட்டோவை ஓட்டி வந்த நபரை நான் நேரில் பார்த்தேன். இந்த வழக்கில் ஆஜராகியிருக்கும் எதிரி தான் அந்த வாகனத்தின் ஓட்டுநர் போல தெரிகிறது. சரியாக ஞாபகமில்லை. (**சாட்சி எதிரியை கை நீட்டி சுட்டிக் காட்டி அடையாளம் காட்டினார்**) தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மறுநாள் 28ம் தேதி என் மனைவியின் உடலை உடற்கூராய்வுக்கு பின்னர் பெற்றுச் சொன்றோம். இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எழுத்து மூலமான புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அவர்கள் கேட்ட போது நான் சொன்னேன், அப்போது அதை அவர்கள் எழுதிக் கொண்டார்கள். காவல் நிலையம் சென்று தகவல் சொன்னேனா என்றால் இல்லை, போலீசார் GHக்கு வந்தார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தினை நான் படித்து பார்த்தேன். எனக்கு அது தெரியும். நான் வாகனம் ஓட்டிச் சென்ற போது எங்கள் வலது பக்கம் திரும்ப வேண்டி என் மனைவி கை நீட்டினார் என்று சொன்னால் தவறு, அது நேர் ரோடு எந்த திருப்பமும் இல்லை. நான் ஆட்டோவின் பின் பக்கமாக சென்று, நானே அதன் பின்னால் சென்று மோதியதால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்று சொன்னால் தவறு. என் பின்னால் தான் ஆட்டோ வந்து மோதியது. நான் சரியான முறையில்

இருசக்கர வாகனத்தினை இயக்காததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் தவறு, நான் ஓரத்தில் தான் வந்து கெண்டிருந்தேன். என் கவனக்குறைவினால் தான் விபத்து நடைபெற்றதாக சொன்னால் தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் தவறு.

Sd/- V.Monika
District Munsif cum Judicial Magistrate,
Annur.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.